# 02 சைவ இல்லம்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்கள் சைவசமயத்தவர்களாவர். சைவர்களுக்கென்று தனிப்பண்புகள் காணப்படுகின்றன. இப்பண்புகள் சிறுவயதிலிருந்தே வளர்த்தெடுக்கும் (சைவ) இல்லமானது முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இது சைவர்கள் வாழும் இடம் என்பதால் இதனை சைவ இல்லம் என்று அழைப்போம்.

ஓர் சைவ இல்லம் புனிதமும், பண்பும் நிறைந்த இடமாகும். அது தெய்வீக சந்நிதியாகவும், கலைக்கோயிலாகவும், நற்பழக்கவழக்கங்களுக்குப் பயிற்சி நிலையமாகவும் அமைந்திருக்கும்.

சைவர்களின் வீடுகளில் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்கள் பல உள்ளன. விளக்கேற்றுதல், இறை வழிபாடு செய்தல், திருமுறை ஓதுதல், பெற்றோரை வணங்குதல் என்பன அவற்றுள் சிலவாகும். அவற்றை முறையாகக் கடைப்பிடித்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

சைவர்களின் இல்லங்களில் தெய்வ வணக்கத்திற்கென்று ஓர் அறை அல்லது ஓரிடம் ஒதுக்கப்பட்டிருக்கும். அங்கே அவர்களின் இஷ்ட தெய்வங்களின் படங்களோ, விக்கிரகங்களோ வைக்கப்பட்டிருக்கும். அத்தெய்வங்களுக்கு அன்றாடம் நீராடி, திருநீறு தரித்து காலையும், மாலையும் திருவிளக்கேற்றி, நறுமலர் வைத்துத் தூபமிட்டு தோத்திரம் ஓதி இறைவழிபாடு செய்வர். இது சைவர்களின் முக்கிய கடமை ஆகும்.



விளக்கேற்றுவதற்கு பித்தளை, செம்பு, வெள்ளி

என்னும் உலோகங்களில் ஒன்றினால் அமையப்பெற்ற விளக்குகளையோ மண் விளக்குகளையோ பயன்படுத்தலாம்.

திருவிளக்கில் ஐந்து சுடர்கள் இருப்பது சிறந்ததாகும். நாள்தோறும் வழிபடும் வழிபாட்டில் ஒரு சுடர் இருப்பதும் போதுமானதாகும். விளக் கேற்றுவதற்கு நெய், நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய் போன்ற எண்ணெய் வகைளுள் ஒன்றினைப் பயன்படுத்தி பஞ்சினால் திரியிட்டு, விளக்கேற்றி இறை வழிபாட்டில் ஈடுபடுதல் வேண்டும் இறைவழிபாட்டின் போது, குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து வழிபாட்டினை மேற்கொள்வது சிறப்பான தாகும். வழிபாட்டின் போது எமக்காகவும், குடும்பத்தவர், அயலவர், நண்பர் அனைவரும் நலமாகவும், நல்லவர்களாகவும் வாழப் பிரார்த்திக்க வேண்டும்.



இறை வழிபாட்டின் போது திருமுறைப் பாடல்களை ஒழுங்கு முறையில் பாடி வழிபட வேண்டும் என்பது நியதியாகும். இவ்வகையில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் ஆகிய பஞ்ச புராணங்களை முறையாக ஓதுதல் வேண்டும். தோத்திரங் களை ஓதும் போது முதலில் 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்வதும் அவற்றை ஓதிய பின் 'திருச்சிற்றம்பலம்' என்று கூறி நிறைவு செய்வதும் சைவமரபாகும். தோத்திரங்களை ஓதும் போது எழுந்து நின்று கைகூப்பி பக்தியோடும், பண்ணோடும் ஓதுதல் வேண்டும். நாம் நல்லொழுக்கம், மனச்சாந்தி பெறவும், பாவத்தைப் போக்கி நல்வாழ்வைப் பெறவும், தினமும் இறைவழிபாடு செய்தல் வேண்டும். திருமுறைகளை ஓதுதல் சைவர்களாகிய எமது கடமையாகும்.

நாம் காலையும், மாலையும் இறைவனை வழிபட்ட பின் நமது கண்கண்ட தெய்வங்களான பெற்றோர்களின் கால்களிலும் வீழ்ந்து வணங்கி அவர்களின் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும். தாய் தந்தையரின் ஆசீர்வாதம் எம்மை நன்கு வாழ வைக்கும்.

அத்துடன் பெற்றோர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யவும் சிறு வயதிலிருந்தே நாம் பழகிக் கொள்ளுதல் வேண்டும்.இத்தகைய பழக்கங்கள் அன்பு, பொறுமை, பக்தி, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு முதலிய குணங்களை வளர்ப்பதற்கு உதவும்.

இத்தகைய நல்ல பண்புகளை வளர்த்தெடுக்கும் இல்லத்தில் அன்பும், சமாதானமும், ஒற்றுமையும் நிலைத்து நிற்கும். எனவே நாமும் அன்றாடம் எமது இல்லத்தில் திருவிளக்கேற்றி இறைவனைத் தொழுது நல்லவர்களாக வாழ்வோம்.

**விஷேட தினங்களின் போது கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்கள்**

மனிதர்களாய் பிறந்த அனைவரும் பிறவிப் பயனை எய்தும் பொருட்டு பல நற்செயல்களைச் செய்கின்றனர். அவ் வகையில் இச்செயல்கள் யாவும் சைவசமயத்தை அடித்தளமாகக் கொண்டு அமைந்து காணப்படுகின்றன. சைவ இல்லங்களில் நாளாந்தம் இடம் பெறும் செயற்பாடுகள் இறை சிந்தனையுடன் கூடியனவாய் அமைவது போல விஷேட தினங்களான பண்டிகைகள், விரதங்கள், மங்களச் சடங்குகள் என்பன இறை சிந்தனைக்கு, சைவ சமயப் பாரம்பரியங்களைப் பேணி வாழ்விற் கடைப்பிடிப்பதற்கும் பெரிதும் உதவுகின்றன.

தைப்பொங்கல், புதுவருடப்பிறப்பு, தீபாவளி முதலிய பண்டிகைகளும், நவராத்திரி, சிவராத்திரி, விநாயகசதுர்த்தி என வரும் விரத காலங்களும், பெயர் சூட்டுதல், ஏடு தொடங்குதல், திருமண நிகழ்வு போன்ற மங்களச் சடங்குகளும் சைவ இல்லங்களில் விஷேட தினங்களாக அனுட்டிக்கப் படுகின்றன. இக்காலங்களில் நாம் கடைப் பிடிக்க வேண்டிய சைவப் பழக்கவழக்கங்கள் பல உள்ளன. அவற்றை நாம் அறிந்து கொள்வோம்.



பண்டிகைகள், விழாக்கள், விரதங்கள் ஆகியவற்றிற்குரிய விஷேகாலங்களில் நாம் நமது வீடுகளையும், சுற்றுப்புறங்களையும் தூய்மைப் படுத்துகின்றோம். நாமும் நீராடி புத்தாடை அணிகின்றோம். வீட்டு வாசலில் கோலம் போடுதல், நிறைகுடம் வைத்தல், மாவிலைத் தோரணம் கட்டுதல் முதலானவற்றையும் இறைசிந்தனையுடன் செய்கின்றோம். புதிய பாத்திரங்களில் உணவைச் சமைத்து, இறைவனுக்கு நிவேதனமாக்கி, திருவிளக்கேற்றி, தூபமிட்டு இறைவனை வழிபாடு செய்கின்றோம். இறைவனுக்குப் படையல் இட்டு நிவேதனமாக்கிய உணவை ஏழை எளியவர்களுக்கு பகிர்ந்தளிப்பதும், உறவினர் சூழ உண்பதும் சைவமக்களின் பழக்கமாகும்.

இத்தகைய சைவப் பழக்க வழக்கங்கள் போற்றிப் பேணப்பட வேண்டியவை ஆகும். எனவே சைவசமயப் பழக்கவழக்கங்களை வீடுகளில் நாம் முறையாக கடைப்பிடிப்போம்.

## பயிற்சிகள்

*01.* நீங்கள் அன்றாடம் வீட்டில் கடைப்பிடிக்கும் சமய பழக்க வழக்கங்களைக் குறிப்பிடுக.

*02.* திருவிளக்கேற்றுவதற்குப் பயன்படுத்தக் கூடிய எண்ணெய் வகைகள் எவை ?

*03.* இறைவழிபாட்டின் போது பஞ்ச புராணங்கள் எவ்வொழுங்கில் பாடப்படவேண்டும் ?

*04.* விஷேட தினங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

*05.* விஷேட தினங்களின் போது வீட்டில் பின்பற்றக்கூடிய சமய பழக்க வழக்கங்களைக் கூறுக.